2004 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 56, திரு. ப. அரசன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

56—

மரம் வளர்த்தல்

***39264—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரிசு நிலங்களில் மரம் வளர்க்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட பத்து மாவட்டங்களில், சுமார் 3100 ஹெக்டேர் பரப்பளவில், வேம்பு, வாகை, புளியம், புங்கை போன்ற தகுதி வாய்ந்த 22 இலட்சம் மரக்கன்றுகள் குளக்கரையில் நடவு செய்ய, ரூ.3.5 கோடி அனுமதிக்கப்பட்டு, 2003-2004—ல் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இயக்கம் என்ற பெயரில், சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளைத் தங்களது சொந்தச் செலவில் நட்டு, அவற்றிற்கு நீர் ஊற்றி பராமரித்து வருகிறார்கள். அவர்களை ஊக்குவிக்கின்ற விதமாக நமது அரசு அவர்களுக்கு ஏதேனும் ஒரு விருது வழங்குகின்ற வகையில் அவர்களை கௌரவிக்கின்ற விதத்தில் ஏற்பாடு செய்யுமா? அதன்மூலம் தனியார்

மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கின்ற விதத்தில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு சிந்திக்கும். தனியார் மரம் வளர்ப்பதற்கு, அவர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்குவதற்கு வனத் துறை தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 57, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

57—

பால் உற்பத்தியாளர் மையம்

•31632—திரு. என்.கே. பெருமாள்:

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மையத்தைப் பிரித்து, தூத்துக்குடி மாவட்டத்திற்கென்று தனியாக பால் உற்பத்தியாளர் மையம் உருவாக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மையத்தைப் பிரித்து, தூத்துக்குடி மாவட்டத்திற்கென்று தனியாக பால் உற்பத்தியாளர் மையம் உருவாக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி தொண்டர்களின் ஒளி விளக்காகவும், ஆறு கோடி தொண்டர்களின் அற்புத அன்னையாகவும், பெற்றோர்களை இழந்து தவிப்பவர்களுக்குப் பிதாவாகவும், 100 கோடி இந்திய மக்களின்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS